## வாரம் - 6 ஊக்கப் பாடல் எண் - 6

# மொழி வாழ்த்து

அன்னை மொழியே அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!

கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே ! நற்கணக்கே!

மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே.

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

மொழி வாழ்த்து பாடி முடித்த பிறகு மாணவர்கள் விரும்புகிற இசையோடு பாடுகிற, உடல் அசைவுடன் பாடுகிற 6 / 8 வரிகள் உடைய பாடல்களை தேர்வு செய்து பாடவைத்து ஊக்குவிக்கவும்.

பிறகு மாணவர்களிடம் அன்பாகப்பேசி கடந்த ஏழு நாள்களில் என்ன செய்தீர்கள் என்று இயல்பாகப் பேசவைத்து அவர்களை உங்களோடு இணைக்கவும்.

பிறகு சென்ற வாரம் எழுதிய வீட்டுப் பாடங்களை கேட்டு வாங்கித் தொகுப்பில் வைக்கவும்.

# உறவுச் சொற்கள் அறிமுகம்

| | | |
|---|---|---|
| MOTHER | = | அம்மா |
| FATHER | = | அப்பா |
| ELDER BROTHER | = | அண்ணன் |
| YOUNGER BROTHER | = | தம்பி |
| ELDER SISTER | = | அக்கா |
| YOUNGER SISTER | = | தங்கை |

மாணவர்களிடம் மேற்சொன்ன உறவுகள் உங்கள் வீட்டில் உள்ளதா எனக் கேட்டுப் பதிய வைக்கவும்.

## உறவுச் சொற்கள் + முகமன் சொற்கள்

வணக்கம்

நன்றி நலமா

மீண்டும் சந்திப்போம்

அம்மா அப்பா அண்ணன்

தம்பி அக்காள் தங்கை ஆசிரியர்

அம்மா வணக்கம் அப்பா வணக்கம்

ஆசிரியர் வணக்கம் அண்ணா நன்றி

அக்கா வணக்கம் அக்கா நன்றி

தம்பி நலமா அண்ணா நலமா

அண்ணா மீண்டும் சந்திப்போம்

அப்பா மீண்டும் சந்திப்போம்

பொருள் உணர்ந்து பேசப் பயிற்றுவிக்கவும்




அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும். எழுத்துகளை எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும் என்பதற்கும் பயிற்சி தரவும். எழுத்துகள் அழகாக இல்லை என்றால் நேர்கோடு வளைகோட்டுப் படங்களை எழுதுவதற்கு முன்பாகப் பயிற்சி தரவும்.

# வாரம் - 6

## மாணவர் செயற்பாடு எண் - 1

மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............

( கற்றுக்கொண்ட க க் எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| க | க் | க | க் | க | க் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 6

**மாணவர் செயற்பாடு எண் - 2**

மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............

( கற்றுக்கொண்ட க க் எழுத்துகளை கீழே வட்டமிடவும் )

கெ கே கா கொ - எழுத்துகளில் உள்ள க வை வட்டமிட்டாலும் சரியே

## 'மதுரை கலெக்டர் நடுநிலையோடு செயல்படுகிறார்'

### தலைமை தேர்தல் அதிகாரி சர்ட்டிபிக்கெட்

**நாகர்கோவில், ஏப்.1-**

"மதுரை கலெக்டர் நடுநிலையோடு செயல்படுகிறார்." என்று தலைமை தேர்தல் அதிகாரி பிரவீன்குமார் கூறினார். நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்ட கலெக்டர்கள் மற்றும் எஸ்.பி.,க்களுடன் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக, அவர் ஆலோசனை நடத்தினார். இதில், மத்திய துணை தேர்தல் அதிகாரி பிரகாஷ் மற்றும் மூன்று மாவட்டங்களின் தேர்தல் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் நிருபர்களிடம் பிரவீன்குமார் கூறியதாவது:

தேர்தல் ஆணையம் நடுநிலையோடு, சட்டப்படி தனது கடமையை செய்கிறது. மதுரை மாவட்ட கலெக்டர் சகாயம் நடுநிலையுடன் தான் செயல்படுகிறார். இந்த விஷயம் கோர்ட் விசாரணையில் இருப்பதால் அது பற்றி மேலும் எதுவும் கூற முடியாது.

தமிழக டி.ஜி.பி. போலோநாத் எல்லா தொகுதிகளும் 'சென்சிட்டிவ்' என்று சொல்லவில்லை. 'கிரிட்டிக்கல்' என்று தான் சொல்லியுள்ளார். இது பற்றி தேர்தல் ஆணையம் தனது கருத்தை கோர்ட்டில் தெரிவித்துள்ளது.

வாகனங்களில் கொண்டு செல்லப்படும், அப்பாவி மக்களின் பணம் பறிக்கப்படுவதாக கூறுகிறார்கள். சட்டத்துக்கு புறம்பாக யார் பணம் கொண்டு சென்றாலும் அது பறிமுதல் செய்யப்படும், என்றார்.

**காலையில் சென்று ஒட்டளியுங்கள்**

## நீதிபதிகள் பதவியேற்பு

**சென்னை, ஏப். 1-**

கூடுதல் நீதிபதிகளாக பணி நீட்டிக்கப்பட்ட ஐகோர்ட் நீதிபதிகள் நான்கு பேர், நேற்று பதவியேற்றனர்.

ஐகோர்ட்டில் கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்களில் ஒன்பது பேர் நிரந்தரம் செய்யப்பட்டனர்.

நிரந்தரம் செய்யப்பட்ட நீதிபதிகள் ராமநாதன், ராஜேந்திரன், அரிபரந்தாமன், சி.டி.செல்வம், கர்ணன், கிருபாகரன், சுந்தரேஷ், சிவஞானம், துரைசாமி ஆகியோர் கடந்த 29ம் தேதி பதவியேற்றனர். இவர்களுக்கு தலைமை நீதிபதி இக்பால் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கூடுதல் நீதிபதிகள் ராஜா, மாலா, அருணா ஜெகதீசன், அக்பர் அலி ஆகியோருக்கு இரண்டு ஆண்டுகள் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் நேற்று பதவியேற்றுக் கொண்டனர்.

தலைமை நீதிபதி இக்பால், இவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். நிரந்தர நீதிபதிகள் பதவியில் காலியிடம் ஏற்படும் போது, இந்த நான்கு பேரும் நிரந்தரம் செய்யப்படுவர்.

## லிபியா வெளியுறவு மந்திரி பிரிட்டனுக்கு தப்பி ஓட்டம்

# வாரம் - 6

## மாணவர் செயற்பாடு எண் - 3

மாணவர் பெயர் ...................................... **நிலை**........... **நாள்**...............

( மாணவர்களே வகுப்பறையில் எழுத்தை இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். இதனை வீட்டிற்குக் கொடுத்து, பயிற்சி செய்து , அடுத்த வாரம் வரும் பொழுது **இயல்பாகப் படிக்க** ஊக்குவிக்கவும். மாணவர்கள் இதனை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடாது. )

## நினைவூட்டல் -

**டப பட , டப டப , டப் டப் , பட பட்**

**மம் ம்ம , மட மட் , டம் பம், டம டம**

**சச் ச்ச மச மச சம சம மச் பச்**

**சட சட பச பச சப் சட் சட**


5

கக் க்க

டக் பக் சக் மக்

சக பக மக

கம கம கட கட

கட்டம் கப்பம் பக்கம்

கட்டடம் கம்பம்

கட்டகம் சட்டகம்

# வாரம் - 6

## வீட்டு வேலை எண் - 1

மாணவர் பெயர் ........................................ நிலை........... நாள்...............

# ப ப் , ம ம் , ச ச் , க க்

( எட்டு எழுத்துகளையும் ஒலித்துக் கொண்டே கீழே வட்டமிடவும்)

## 'மதுரை கலெக்டர் நடுநிலையோடு செயல்படுகிறார்'

### தலைமை தேர்தல் அதிகாரி சர்ட்டிபிக்கெட்

**நாகர்கோவில், ஏப்.1-**

''மதுரை கலெக்டர் நடுநிலையோடு செயல்படுகிறார்.'' என்று தலைமை தேர்தல் அதிகாரி பிரவீன்குமார் கூறினார். நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்ட கலெக்டர்கள் மற்றும் எஸ்.பி.,க்களுடன் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக, அவர் ஆலோசனை நடத்தினார். இதில், மத்திய துணை தேர்தல் அதிகாரி பிரகாஷ் மற்றும் மூன்று மாவட்டங்களின் தேர்தல் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் நிருபர்களிடம் பிரவீன்குமார் கூறியதாவது:

தேர்தல் ஆணையம் நடுநிலையோடு, சட்டப்படி தனது கடமையை செய்கிறது. மதுரை மாவட்ட கலெக்டர் சகாயம் நடுநிலையுடன் தான் செயல்படுகிறார். இந்த விஷயம் கோர்ட் விசாரணையில் இருப்பதால் அது பற்றி மேலும் எதுவும் கூற முடியாது.

தமிழக டி.ஜி.பி. போலோநாத் எல்லா தொகுதிகளும் 'சென்சிட்டீவ்' என்று சொல்லவில்லை. 'கிரிட்டிக்கல்' என்று தான் சொல்லியுள்ளார். இது பற்றி தேர்தல் ஆணையம் தனது கருத்தை கோர்ட்டில் தெரிவித்துள்ளது.

வாகனங்களில் கொண்டு செல்லப்படும், அப்பாவி மக்களின் பணம் பறிக்கப்படுவதாக கூறுகிறார்கள். சட்டத்துக்கு புறம்பாக யார் பணம் கொண்டு சென்றாலும் அது பறிமுதல் செய்யப்படும், என்றார்.

**காலையில் சென்று ஓட்டளியுங்கள்**

## நீதிபதிகள் பதவியேற்பு

**சென்னை, ஏப். 1-**

கூடுதல் நீதிபதிகளாக பணி நீட்டிக்கப்பட்ட ஐகோர்ட் நீதிபதிகள் நான்கு பேர், நேற்று பதவியேற்றனர்.

ஐகோர்ட்டில் கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்களில் ஒன்பது பேர் நிரந்தரம் செய்யப்பட்டனர்.

நிரந்தரம் செய்யப்பட்ட நீதிபதிகள் ராமநாதன், ராஜேந்திரன், அரிபரந்தாமன், சி.டி.செல்வம், கர்ணன், கிருபாகரன், சுந்தரேஷ், சிவஞானம், துரைசாமி ஆகியோர் கடந்த 29ம் தேதி பதவியேற்றனர். இவர்களுக்கு தலைமை நீதிபதி இக்பால் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கூடுதல் நீதிபதிகள் ராஜா, மாலா, அருணா ஜெகதீசன், அக்பர் அலி ஆகியோருக்கு இரண்டு ஆண்டுகள் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் நேற்று பதவியேற்றுக் கொண்டனர்.

தலைமை நீதிபதி இக்பால், இவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். நிரந்தர நீதிபதிகள் பதவியில் காலியிடம் ஏற்படும் போது, இந்த நான்கு பேரும் நிரந்தரம் செய்யப்படுவர்.

## லிபியா வெளியுறவு மந்திரி பிரிட்டனுக்கு தப்பி ஓட்டம்

# வாரம் - 6

## வீட்டு வேலை எண் - 2

**மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............**

(கற்றுக்கொண்ட எழுத்துகளைக் கீழே எழுதிக் கொண்டு வரவும் )
(எழுதும் பொழுது எழுத்துகளை ஒலித்துக் கொண்டே எழுதவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம ம் | ச ச் | க | க் | க | க் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |